செ.வெ.எண்-52 நாள்-21.02.2021

# அரியலூர் மாவட்டத்தில் குறுங்காடு தொடக்க விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா. இஆப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியம், குமிழியம் கிராமத்தில் மரங்களின் நண்பர்கள் அமைப்பு மூலம் குறுங்காடு தொடக்க விழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் மரக்கன்றுகளை நட்டு வைத்து, துவக்கி வைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது :-**

பொதுமக்கள் சுற்றுச்சூழலை பேணிக்காப்பதற்கு நீர், நிலம், காற்று ஆகியவற்றை மாசுபடுதலிலிருந்து தவிர்க்க வேண்டும். மரங்கள் வளர்ப்பதினால் சுற்றுச்சூழல் மாசுப்படுவதை தவிர்க்கப்படுகிறது. இதன் அடிப்படையில், மரங்களின் நண்பர்கள் அமைப்பு மூலம் அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மரங்களை வளர்த்து, பேணிகாக்கும் வகையில் குறுங்காடுகள் அமைத்து வருகின்றனர்.

பொதுமக்கள் தங்களது கிராமங்களிலும் இதுபோன்ற மரக்கன்றுகள் வளர்த்து, சுற்றுச்சூழல் பெருக பராமரித்து பேணிகாக்க வேண்டும். மேலும், மழை நீரை முற்றிலும் சேமித்து, பாதுகாக்க வேண்டும். வீட்டிற்கு இருமரம் வளர்த்து மாவட்டத்தின் சுற்றுச்சூழலை பொதுமக்கள் அனைவரும் பேணிக்காக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், அப்பகுதி மாணவர்கள் மூலம் யோகா, சிலம்பம், கராத்தே, ஜீடோ போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும், பசுமை சார்ந்த இயங்கும் அமைப்புகளை பசுமை சேவை விருதுகளும், மாணவர்களுக்கு புத்தம், துணிப்பைகளை வழங்கினர்கள்.

இந்நிகழ்ச்சியில், வட்டாட்சியர் முத்துகிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ராஜா, சிவாஜி, மரங்களின் நண்பர்கள் அமைப்பினர்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**